

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி அவர்களின் தாயார் திருமதி. ப.சௌந்தரி அம்மாள் அவர்கள் இயற்கை எய்தியதையடுத்து, நேற்று (28.10.2025) அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் திருத்தம்: மக்களின் உரிமைகளை திருட்டுக் கொடுக்காமல்,

# மக்கள் ஏமாந்துவிடாமல் எச்சரிக்கை மணியடிப்பது மிகமிகத் தேவை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

சென்னை, அக். 29 -

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற சாக்கில், தேர்தல் ஆணையம் "பீகார் தனத்தை" இங்கேயும் செய்துவிட முனையக் கூடாதபடி, தடுப்பு நடவடிக்கைகளில், முதல் நடவடிக்கையாக நம்முடைய முதலமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் (27.10.2025) தோழமைக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தின் முடிவில், வருகின்ற 2.11.2025 அன்று காலை சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்ற முடிவு எடுக்கப்பட்டு இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். மக்களின் உரிமைகளை திருட்டுக் கொடுக்காமல், மக்கள் ஏமாந்துவிடாமல் எச்சரிக்கை மணியடிப்பது மிகமிகத் தேவை என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

'உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. அதிகமான வாக்காளர்களைக் கொண்டுள்ள மக்களாட்சி நடைபெறும் நாடு' என்று மார்தட்டிக் கொள்ளும் நாடு என்றாலும், வாக்குச் சாவடியில் மிக மோசமான ஓர் அம்சமாக கள்ள ஓட்டுப் போடுதலும் உள்ளதால், அதைத் தடுக்கும் முறையாக வாக்காளர்கள் வாக்களித்ததின் சாட்சியமாக ஒரு விரலில், அழிக்க முடியாத மையால் புள்ளி குத்தியே தேர்தல் நடக்கிறது!

இது உலக அரங்கில் நமது நாட்டில் நாணயக் கேடு மலிவு என்பதற்குச் சட்டப்பூர்வ ஒப்புதல் வாக்குமூலம் ஆகும்.

இதற்கே நாம் வெட்கித் தலைக்குனிய வேண்டும்! "அழியாத மையையே அழித்துவிட்டு, நான் 5 முறை வோட்டுப் போட்டேன் பார்த்தீர்களா?" என்று "பெருமை பேசும்" ஒழுக்க(?) நாடு இந்த ஞான பூமி!

அது அண்மையில் குறைந்து வருகிறது என்பது ஆறுதலும் தருவதாகும்.

ஆனால், இப்போது அதைவிடக் கொடுமையாக, "ஓட்டுத் திருட்டு" என்ற சொல்லாக்கம் புதிதாக நம் நாட்டுத் தேர்தல் அகராதியில் இடம்பெற்று வருவது மிகவும் வெட்கக் கேடு!

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களை

நீக்கியது தேர்தல் ஆணையம்!

தற்போது இந்திய நாட்டின் பெரிய மாநிலங்களில் ஒன்றான பீகாரில், நவம்பர் ஒன்றாம் தேதியும், 6 ஆம் தேதியும் இரண்டு கட்டமாகச் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று, நவம்பர் 12 ஆம் தேதி அதன் முடிவுகள் அறிவிக்கப்படவிருக்கின்றன!

இதற்குமுன் அங்கே தேர்தல் ஆணையமே வாக்காளர் பட்டியலில் 'Special Intensive Revision' (SIR) என்ற ஒரு திட்டத்தைப் புகுத்தி, பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களைத் தானடித்த மூப்பாகவே நீக்கியது.

இதுகுறித்து பீகாரில் ஓர் எதிர்ப்புப் புயல் எழுந்தது!

மக்களிடையே விழிப்புணர்வை

ஏற்படுத்திய ராகுல் காந்தி!

அதற்குமுன் மகாராட்டிரா, கருநாடகா போன்ற மாநிலங்களில், தேர்தலின் போது வாக்குகள் திருடப்பட்டன என்ற குற்றச்சாட்டினை மிக அழுத்தமாக, பல ஆதாரங்களுடன் இந்திய காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவரும், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள், மேடைதோறும் சுட்டிக்காட்டி, மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

உச்சநீதிமன்றத்தில் இது பற்றிய அவசர வழக்குகள் விசாரணைக்கு வந்து, தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் நன்கு 'குட்டுக்கள்' வைத்து, குறிப்பிட்ட தேதிக்குள், காரண காரிய விளக்கம், செயல் திருத்தப்பாடு தேவை என்று ஆணையிட்டது!

இதுவே, இந்தியத் தேர்தல் ஆணையத்திற்குப் பெருமை தருவதாகுமா? அந்த ஆணையம் - 'சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்' என்பதை நாகரிகத்துடன் சுட்டிக்காட்டியும், அது மக்களிடையே, குறிப்பாக எதிர்க்கட்சிகளிடையே அதன் நம்பகத்தன்மையைப் போதிய அளவில் மீட்டெடுக்க வில்லை.

இந்த நிலையில், 2026 இல் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் 12 மாநிலங்களில் வாக்காளர்ப் பட்டியலைத் தீவிர முறையில் மறுசீரமைக்கும் (SIR) நடவடிக்கைகளில் தேர்தல் ஆணையம் இறங்க இருப்பதனால், தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையில் உள்ள மதச்சார்பற்ற கூட்டணியினரும் - ஜனநாயகத்தின் மாண்புக்கு இழுக்கு வரக்கூடாது என்று கருதுவோரும் மிகவும் விழிப்போடு விரைந்த பல நடவடிக்கைகளில் ஈடுபட முனைந்திருப்பது மிகமிக முக்கியமானதொன்றாகும்.

வருமுன்னர் காப்பதே சிறந்ததாகும்!

'வருமுன்னர் காப்பதே சரியான செயல்' ஆகும். தக்க பாதுகாப்பு, தடுப்பு நடவடிக்கைகளில் அயராமல் ஜனநாயகம் காக்கும் பாதுகாப்புப் படையினராகத் தங்களை மாற்றி, ஓட்டுத் திருட்டு அல்லது வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற சாக்கில், தேர்தல் ஆணையம் "பீகார்தனத்தை" இங்கேயும் செய்துவிட முனையக் கூடாதபடி, தடுப்பு நடவடிக்கைகளில், களப் பயிற்சி வாக்குச் சாவடியில் களப் பயிற்சி அமைவதும், அதற்கு முன்னரே, பட்டியலிலிருந்து குறிப்பாக சிறுபான்மையோரை நீக்கி, பல "அரசியல் ரசவாதங்களில்", "சித்து விளையாட்டுகளில்" ஈடுபடாமல் தடுப்பதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் - அவசர அவசியமாகும்.

வாக்குத் திருட்டு

நடைபெற விட மாட்டோம்!

அதற்கான முதல் நடவடிக்கையாக நம்முடைய முதலமைச்சர் தலைமையில் நேற்று (27.10.2025) அரசியல் தோழமைக் கட்சித் தலைவர்களு டன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தின் முடிவில், வருகின்ற 2.11.2025 அன்று காலை சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்ற முடிவு எடுக்கப்பட்டு இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

'வாக்குத் திருட்டு' என்ற புதிய முறையைச் சற்றும் தமிழ்நாட்டில் நடைபெற விடமாட்டோம் என்பதைக் கண்காணிக்கும் பல முக்கியத் தடுப்பு முறைகளை அக்கூட்டத்தில் விவாதித்து, சிறப்பான செயற்பாடுகளை வகுப்பது மிகவும் இன்றியமையாததாகும்!

மக்களின் உரிமைகளைத் திருட்டுக் கொடுக்காமல், மக்கள் ஏமாந்துவிடாமல் எச்சரிக்கை மணியடிப்பது மிகமிகத் தேவை!

இவ்வாறு கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### திரு.வி.க. நகர் எம்.எல்.ஏ. ப.தாயகம் கவி தாயார்

# ப.சௌந்தரி அம்மையார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 29-

**திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தாயகம் கவி அவர்களின் தாயார் திருமதி.ப.சௌந்தரி அம்மையார் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-**

திரு. வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகத் துணை அமைப்புச் செயலாளருமான தாயகம் கவி அவர்களின் தாயார் திருமதி. ப. சௌந்தரி அம்மையார் அவர்கள் உயிரிழந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

கழகத்தின் கருப்பு சிவப்பு உணர்வுள்ள உறுதியான பெண்மணியாக விளங்கிய அவர், 97 வயதிலும் முரசொலியை நாள்தோறும் படித்து வந்தார் என்று அறிந்தபோது சிலிர்த்தது.

கொள்கை உரமூட்டி வளர்த்த அன்புத் தாயை இழந்து தவிக்கும் தம்பி தாயகம் கவி அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### குறுவை நெற்பயிருக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீட்டுத் தொகையை முன்னதாக வழங்கிடல்!

# நடப்பு சம்பா பருவ நெற்பயிரை - நவ. 15-க்குள் காப்பீடு செய்தல்!

## வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

**சென்னை, அக்.29-**

**2025-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட குறுவை நெற்பயிருக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீட்டுத் தொகையை முன்னதாக வழங்கவும், நடப்பு சம்பா பருவ நெற்பயிரை நவம்பர் 15-ஆம் தேதிக்குள் காப்பீடு செய்வது குறித்தும், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் 28.10.2025 அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**



தலைமைச் செயலகத்தில் நேற்று (28.10.2025) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்நாட்டில் பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் வடகிழக்கு பருவமழையால் நீரில் மூழ்கிய பயிர்களின் கணக்கெடுப்பு தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆர்.ஜெயா, வ.தட்சிணாமூர்த்தி, பி.முருகேஷ், பி.குமரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தனியார் காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து பல்வேறு மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையினால் அறுவடை பருவத்திலுள்ள குறுவை நெற்பயிர் பாதிப்படைந்துள்ளது. பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட குறுவை நெற்பயிருக்கான இழப்பீட்டுத் தொகையை முன்னதாக வழங்க காப்பீட்டு நிறுவனங்களை வலியுறுத்தியும், விவசாயிகள் இயற்கை பேரிடரினால் ஏற்படும் பொருளாதார இழப்பிலிருந்து பாதுகாக்கவும் நடப்பு சம்பா பருவ நெற்பயிரை விவசாயிகள் நவம்பர் 15ம் தேதிக்குள் காப்பீடு செய்வது குறித்தும் நேற்று (28.10.2025) தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், குறுவை நெற்பயிரில், மகசூல் இழப்பு கணக்கிட 18,520 பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு, இதுவரை 13,140 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என்றும், மீதமுள்ள 5,380 பரிசோதனைகளை விரைவில் முடிக்க வேண்டும் என்றும், பயிர் அறுவடை பரிசோதனைகள் முழுவதுமாக முடித்து, அறிவிக்கை செய்யப்பட்ட தகுதி வாய்ந்த கிரமங்களுக்கு, வழக்கமாக 2026 ஜனவரி மாதத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை 2025 டிசம்பர் மாதம் முதல் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் நேரடியாக வரவு வைக்க வேண்டும் என்றும், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்களை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிவுறுத்தினார்.

தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் சம்பா நெற்பயிரை முழு வீச்சில் சாகுபடி செய்து வருகின்றனர். இதுவரை 16.16 இலட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை குறைவான விவசாயிகளே பயிர் காப்பீடு செய்துள்ளதால் விரைவாக காப்பீடு செய்வதற்கு துரித நடவடிக்கை துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது நிலவிவரும் வானிலை மாற்றங்களினால் பூச்சி நோய் தாக்குதல், வெள்ளச் சேதம் போன்ற இடர்பாடுகளால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, சம்பா நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி வரை காத்திராமல், விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என்றும், குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் 2025, அக்டோபர் 31-ஆம் தேதிக்குள்ளும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், சேலம், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தேனி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, கடலூர், திருவள்ளூர் மற்றும் ஈரோடு ஆகிய 27 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் 2025 நவம்பர் 15-ஆம் தேதிக்குள்ளும், கன்னியாகுமரி, திண்டுக்கல், விருதுநகர், நாமக்கல், திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 6 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் 2025 டிசம்பர் 15-ஆம் தேதிக்குள்ளும் சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்ய வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும், துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர் மூலம் விவசாயிகளுக்கு சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்வது குறித்து ஊடகங்கள் வாயிலாக அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், கடன் பெறா விவசாயிகள் பொது சேவை மையங்கள் மற்றும் தேசிய பயிர்க்காப்பீட்டு இணையதளத்தில் உள்ள "விவசாயிகள் கார்னரில்" நேரிடையாகவோ காப்பீடு செய்து இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ. தட்சிணாமூர்த்தி, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர் திருமதி. ஆர்.ஜெயா, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் டெல்டா மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நாளை 30.10.2025 வியாழக் கிழமை அன்று மாலை 4 மணிக்கு, காக்களூரில் உள்ள ஆர்.எம். கெஸ்ட் ஹவுஸ்சில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே. ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபால், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் க.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர் சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். கூட்டம் முன்னதாக ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரை யாற்றிகிறார்

மேலும் இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :** கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் 28.10.2025 அன்று நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" குறித்து. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



தி.மு.க.வின் கோட்பாடு மற்றும் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் "அண்ணா அறிவகம் என்ற அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திருத்தணியில் "அண்ணா அறிவகம் அலுவலகத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திறந்து வைத்தார். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் எஸ்.குமரன் , சு.ரேணு குமார், சி.மணி, கெ.விஜயகுமார், எச்.திலீப் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.